

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கழக மாநில மாணவர் அணிச் செயலாளர் திருமதி வீரமணி, துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி உள்ளார்.



ஈரோடு மாவட்டம் காரைவாய்க்கால் பகுதியில் உள்ள காலிங்கராயன் வாய்க்கால் மைல் 13/7 ல் உள்ள தொட்டி பாலம் சீரமைப்பு பணிகள் குறித்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை திருமூர்த்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குன்னம் தொகுதியில்

# ரூ.1.51 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், மார்ச் 16–*

*குன்னம் சட்டமன்ற தொகுதி, வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட கோவிந்தராஜ பாளையம், வயலப்பாடி, வ.கீரனூர், அகரம்சீகூர், அத்தியூர், ஒகளூர், கழனிவாசல், லெப்பைக்குடிக்காடு, பென்னக்கோணம், வடக்கலூர், பேரளி, பெரியம் மாபாளையம் ஆகிய ஊராட்சிகளில் சா.சி.சிவசங்கர் குன்னம் சட்டமன்ற ரூ.1.51 கோடி மதிப்பிலான பல்வேறு பல்வேறு முடிவுற்றப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.*

*சா.சி.சிவசங்கர் அமைச்சர் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக திகழ்ந்து வரும் முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய, அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.*

*அதன் அடிப்படையில், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோவிந்தராஜப்பாளையம், வ.கீரனூர், அகரம்சீகூர், அத்தியூர், ஒகளூர், கழனிவாசல், பென்னக்கோணம், வடக்கலூர், பேரளி, பெரியம்மாபாளையம் ஆகிய ஊராட்சிகளில் ஊராக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைகளின் சார்பில் கனிமம் மற்றும் சுரங்கங்கள் நிதியின் மூலம் தலா ரூ.9.15 லட்சம் வீதம் மொத்தம் ரூ.91.5 லட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களும், காடூர், வயலப்பாடி ஆகிய கிராமங்களில் புதிய நியாய விலை கடைகளும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*மேலும் வயலப்பாடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.60 லட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் என இன்று மட்டும் ரூ.1.51 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.*

*இந்த நிகழ்ச்சிகளில்,*

*ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் சிவக்குமார், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வக்குமார், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை, உதவி பெறியாளர் ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*




நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.40.46 கோடி மதிப்பில் முடிவுற்ற பல்வேறு திட்டபணிகளை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, 2,271 பயனாளிகளுக்கு ரூ.7.55 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வன அலுவலர்கள் கஷ்யப் ஷஷாங் ரவி (நீலகிரி வனக்கோட்டம்), தர்மராஜ் (கூடலூர்), மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, உதகை நகர மன்ற உறுப்பினர் திருமதி.வாணிஸ்வரி, நகரமன்றத் துணைத் தலைவர் ரவிக்குமார், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் திரு ஜார்ஜ்,கூடலூர் நகர மன்ற தலைவர் திருமதி.பரிமளா, குன்னூர் நகர மன்ற துணைத் தலைவர் திரு.வாஷிம் ராஜா மற்றும் வனத்துறை அதிகாரிகள், துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.






திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றிய பகுதியில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகிய நூறு குடும்பங்கள் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### பத்திரிகையாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு – வீட்டு மனை – ஓய்வூதிய உயர்வு உள்ளிட்ட அறிவிப்புகள்:

# முதல்வருக்கு தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் நன்றி!

## சங்க நிர்வாகிகள் அறிக்கை!

சென்னை, மார்ச் 16–

பத்திரிகையாளர் சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று மருத்துவக் காப்பீடு, வீட்டுமனை மற்றும் ஓய்வூதிய உயர்வு உள்ளிட்ட அறிவிப்புக்கு – WJUTயின் நன்றி அறிக்கை வருமாறு:–

இது தொடர்பாக தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி அறிக்கையில் கூறியிருப்பதாவது;

சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று பத்திரிகையாளர் சங்கத்தின் பிரநிதிகள் முதலமைச்சர் அவர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தில் உயர்வு, மருத்துவக் காப்பீடு மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட கோரிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் முன்வைத்தனர்.

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கும் வகையில் பத்திரிகையாளர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் மாதம் 12,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதேபோல, அங்கீகார அடையாள அட்டை வைத்திருக்கும் மருத்துவக் காப்பீட்டு அனைவருக்கும் முதலமைச்சரின் விரிவான திட்டத்தின்கீழ் மருத்துவ காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை பத்திரிகையாளர்கள் குடியிருக்க வீடு அல்லது வீடுகட்ட நிலம் ஒதுக்கித் தர வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டுமனைகள் வழங்க ஏற்பாடு செய்யவும், இதற்கு பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்.

கோரிக்கை வைத்த சில மணி நேரங்களில் முக்கியமான கோரிக்கைகள் நிறைவேற்றம். ஏனைய கோரிக்கைகள் மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவாதம் தந்துள்ளார்.

இந்த அறிவிப்பு உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் அனைவருக்கும் மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தி தொடர்பு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் எங்களது ”தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பாகவும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பத்திரிகையாளர்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என மாநிலத் தலைவர் அ. ஜெ.சகாயராஜ், மாநிலப் பொதுச் செயலாளர் பா.பிரதீப்குமார், மாநிலப் பொருளாளர் இரா.ராம்ஜி ஆகியோர் விடுத்துள்ள நன்றி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது..

# அதானே

இ. டி. இன்கம்டேக்ஸ் சிபிஐ இவற்றோடு முப்படையை திரட்டிக் கொண்டு வந்தாலும் சரி

இல்லை

அவற்றை எல்லாம் காட்டி

இன்னும் எஞ்சியுள்ள கட்சிகளை எல்லாம் மிரட்டிக் கொண்டு வந்தாலும் சரி..

சித்திரைத்

திங்களில்

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்

முதலமைச்சர்

இருக்கையில்

அமர்ந்து

ஒலிக்கப் போவது

என்னவோ




“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

என்னும் நான்”

என்னும்

அந்த கம்பீரக் குரல் தான்...

**என்ன நாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



கழக மாநில மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் மாணவர் அணி செயலாளர் திருமதி வீரமணி தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.